T04166
R001J06

உ

General 2 8979
1973

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# திருக்கருவைப

# பதிற்றுப்பத்தந்தாதி.

அதிவீரராமபாண்டியர்

அருளிச்செய்தது.

A166

இது

யாழ்ப்பாணத்து வண்ணைநகர்ச்

சுவாமிநாதபண்டிதரால்

சென்னபட்டணம்

சைவவித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

சௌமியவூ ஆவணிமீ.

இதன்விலை அணா - ௨

கணபதிதுணை.

# திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி.

## காப்பு.

ஆனகருவைப்பதிற்றுப்பத்தந்தாதிச்சொல்லலங்கன்முற்றும்
ஞானவுருவாங்களவீசனளினசரணமிசைச்சாத்தத்
தானவருவிபொழிதடக்கைத்தறுகட்சிறுகட்புகர்முகத்து [ம்
கூனலிலவெண்பிறைக்கோட்டுக்குணகுஞ்சரத்தினடிதொழுவா

---

சீரார்கமலச்சேவடியென்சிந்தையிருத்தியுனதுதிருப்
பேராயிரமுமெடுத்தோதிப்பெம்மான்கருவையெம்மானென்
றாராவமுதமுண்டவர்போலனந்தானந்தத்தகநெகிழ
வாராவின்பமறிவித்தாயறியேனிதற்கோர்வரலாறே. (௧)

ஆறாக்காமக்கொடியகனலவர்மூட்டவவலமனம்
நீறாய்வெந்துகிடப்பேனைநின்றாள்வழுத்தநினைவுதந்து
மாறாநேயத்திரவுபகன்மறவாதிருக்கவரமளித்தாய்
சீறாடரவமுடித்தசடைக்கருவைவாழுஞ்செழுஞ்சுடரே. (௨)

சுடரேவலியத்தடுத்தாண்டதுணையேபிறவித்தொடுகுழிவீழ்
இடரேயகலக்களாநீழலிருந்தகோவேயெம்பெருமான்
உடலேயோம்பித்திரியுமெனையுன்னைநினைக்கப்பணித்தவருட்
கடலேயுனையன்றொருதெய்வங்காணவழுத்தக்கடவேனோ. (௩)

வேனிற்சிலைவேடொடுகணைக்கும்விளங்குமகளிருளங்கவற்றுப்
பானற்கொடியவிழிவலைக்கும்பற்றாய்வருந்தியனுதினமும்
ஈனத்துயரக்கடலழுந்துமெனையும்பொருளாவடிமைகொண்ட
ஞானத்துருவேதமிழ்க்கருவைநம்பாபொதுவினடித்தோனே. ( )

நடித்தேன்பொய்க்கூடெடுத்தவமேநன்னாள்கழியவின்னாளில்
படித்தேனுனதுதிருநாமம்பண்டைவினையைப்பற்றறுத்தேன்
பிடித்தேன்பிறவிக்கடனீந்தப்பெரியபுணையாவுனதடியை
முடித்தேனுள்ளத்தெண்ணமெல்லாங்கருவைவாழுமுன்னோனே.

முன்னைப்பிறவித்தவப்பயனோமுழுதுமறியாமூடனிவன்
என்னைக்கருத்திலிரங்கியோயாதோவறியேனிரவுபகல்
கன்னற்பாகிற்கோற்றேனிற்கனியிற்கனிந்தகவிபாட
அன்னத்தொகுதிவயற்கருவையாண்டானென்னையாண்டதுவே

ஆண்டகுரவனாவானையல்லற்பிறவியறுப்பானை, வேண்டும்பத
விதருவானைவெளிவீட்டின்பமளிப்பானைத், தூண்டல்செய்யா
மணிவிளக்கைத்தொழின்மூன்றியற்றுந்தொல்லோனைக், காண்
டற்கரியபேரொளியைக்களாவினிழற்கீழ்க்கண்டேனே. (எ)

கண்டகண்கள்புனல்பாயக்களிப்பாயுள்ளங்கரையழிய
விண்டமொழியுநாக்குழறவிம்மிமேனிமயிர்பொடிப்பப்
பண்டைவசம்போய்ப்பரவசமாய்ப்பரமாநந்தத்தெளிநறவம்
உண்டுதெவிட்டாவருள்புரிந்தான்கருவைவாழுமுரவோனே. ()

உரகாபரணத்திருமார்புமுமையொப்பனையாளிடப்புறமும்
சிரமாலிகையும்புரிசடையுஞ்செய்யவாயுங்கறைமிடறும்
வரதாபயமுமழுமானும்வயங்குகரமுமலரடியும்
கருவாபுரியான்வெளிப்படுத்திக்காட்சிகொடுத்துநின்றானே. ()

நின்றநிலையுஞ்செய்தொழிலுநினைத்தகுறியும்வழிபாடும்
ஒன்றுபதமும்பதங்கடந்தவுண்மைப்பொருளுமறியேனை
இன்றுன்னடியாருடன்கூடவெண்ணம்புரிந்தவினியவருள்
நன்றுநன்றுதமிழ்க்கருவைநம்பாவும்பர்நாயகனே. (௧௦)

வேறு.

நாயகன்முகுந்தன் சததளப்பொகுட்டினான்முகனென்னவீற்றிருக்கும், தூயவன்கருவைக்களாநிழலமர்ந்தோன்றுணையடிப்

புகழினைவழுத்தி, யாயிருஞாலமெடுத்தெடுத்தேத்தவரம்பெறு மதுரநாவலர்கள், சேயிருவிசும்பிற்கற்பகநீழற்செல்வமும்வேண்டுவதிலையே. (கச)

வேண்டுவதொன்றுதமியனெப்பிறப்பும்வெந்தழனரகிடை விழினும், காண்டகுசிறப்பினரம்பையர்சூழக்கற்பகநீழல்வைகிடினும், தூண்டகுசுடரேகளாநிழலமர்ந்தசோதியேகருவைநாயகனே, ஆண்டகாய்நினதுதிருவடிக்கமலத்தன்பெனுமழிவிலாப்பொருளே. (கஉ)

அழிவிலாப்பொருளேபழமறைக்கொழுந்தேயலையெறியமுதவாரிதியே, ஒழிவிலாதருளுங்கற்பகக்கனியேயொப்பனைமைப்பரந்தெறிக்கும், விழியினலுருகியொருபுறமளித்தவிமலனேகருவையம்பரனே, இழிவிலாப்புணையாப்பிறவியங்கடனின்றேறநான்பெற்றதுன்பதமே. (கரு)

உன்பதமேத்தித்துன்பவோறுக்கவுலகினிற்றிருவுடன்வாழும், மன்பதைக்கெல்லாமெய்திடுந்தரமோவலியவந்தெனைத்தடுத்தாண்டுள், அன்புவந்தொருவரறிந்திடாவறிவுமறிவுறுத்தருளினையதற்கு, முன்பெதுபுரிந்தேன்கருவையம்பதிவாழ்முதல்வனேமுக்கண்வானவனே. (கசு)

வானெரியறல்கான்மண்ணெனப்பகுக்கவரும்பெரும்பூதமோரைந்தும், ஆனமுக்குணமுங்கரணமோர்நான்குமனைத்துமாயாதியீறின்றி, ஊனுறையுடலுக்குயிருமாயுயிருக்குணர்வுமாயொன்றினுந்தோயா, ஞானநாயகனேகருவையம்பரனேநானறிந்துரைக்குமாறெவனே. (கஎ)

எவனுயிர்க்குயிராயெள்ளுமெண்ணெயும்போலெங்கணுமிடையறுநின்றான், எவனைத்துலகுமீன்றுகாத்தழிக்கவிறைமைசான்மூவருவெடுத்தான், எவன்முதலிடையீறின்றியெஞ்

ஞான்றுமீறிலாமறைமுடியிருப்பான், அவனெனைப்புரக்கத்திரு
க்களாநீழலமர்ந்தருள்புரிந்தகாரணனே. (கசு)

காரணமேதென்றறிகிலேன்றமியேன்கற்றலமனத்தினைக்க
ரைத்து, வாரணிமுலையாளொப்பனையோடுமெழவிடைமேலெழு
ந்தருளி, நாரணனறியாத்திருவுருக்காட்டிநல்லருள்சுரந்துவாழ்
வித்தான், பூரணன்கருவைக்களாநிழலமர்ந்தபுண்ணியன்விண்
ணவர்க்கிறையே. (கஎ)

விண்ணவர்மகுடகோடிவீழ்ந்திறைஞ்சும்விரைமலர்ச்சேவடி
மிசையே, உண்ணிறைகாதலன்புநின்றுருகவுலையிடுமெழுகென
வுருகிக், கண்ணினீர்வாரக்கருவையம்பரனேகடவுளேயென்றெ
டுத்தேத்தப், புண்ணியம்புரிந்தேனிப்பெரும்பேறுபூதலத்தெ
வர்பெறுவாரே. (கஅ)

பெறுவதுநினதுதிருவடிக்கமலம்பேசுவதுன்றிருநாமம் [டோ
உறுவதுநினதுதிருவுருவெளியாமுணர்வதுன்னருளலாதுண்
மறுவறுசிறப்பின்மாசிலாமணியேவரதனேசிவபெருமானே
குறுமுனிபரவக்களாநிழலமர்ந்தகொடிமதிற்கருவையாதிபனே.

ஆதவன்மதிபாரனல்வெளிபுனல்காலருமறையெச்சனென்
றெட்டுப், பேதமாமுருவாயருவமாய்நிறைந்தபெற்றியாலுற்று
நானுன்னை, எதினாலுணர்வேனுணருமாறருளாயிளநிலாப்பசு
ங்கொழுந்தணிந்த, சோதியேகருவையொப்பனைகளபத்துணை
முலைதழுவுகாதலனே. (உ0)

வேறு.

காதலுற்றிடமனநிலைபெற்றிடக்கனிந்திடக்களிகூரப்
போதமுற்றிடயானெனதென்றிடும்புலைச்செருக்கறமாற
நாதன்முத்தமிழ்க்கருவையம்பரனெனநாத்தழும்புறவோதி
ஓதிமற்றுநான்பெற்றதையிற்றெனவுரைத்திடமுடியாதே. ()

முடிகடந்ததுககனகோளகைநெடுமுகட்டினுக்கப்பாலும்
அடிகடந்ததுபாதலமேழினுக்கப்புறத்தனலோடும்
துடிகடந்தகைகடந்தன திகந்தமாஞெல்புகழ்க்களாவீசன்
பொடிகடந்தபான்மேனியான்றிருநடம்புகலுதற்கெளிதாமோ.

எளியன்புன்ஞெழிற்பாதகன்மாதரார்இளமுலைவளம்வேட்ட களியன்றீக்குண வஞ்சகநெஞ்செனுங் கருங்கலைக் கரைவித்து, வெளியில்வந்துநின்பொன்னடிசென்னியின் மிலைந்தெனையாட் கொண்ட, அளிகனிந்தநின்னருட்குணமுரைப்பதாரருங்களாவ மர்ந்தோனே. (உ௩)

அமரர்மாதவர்முனிவர்திரண்டுநின் றனுதினந்தொழுதேத்தும்
தமரநூபுரப்பொற்சரணேத்திடத்தமியனுக்கருள்செய்தான்
குமரனுலடுஞ்சூர்ப்பகைதடிந்தவன்கொள்ளைவண் டினமார்க்கும்
கமலவாவியும்பொங்கருஞ்சூழ்திருக்கருவையம்பெருமானே. ()

கருவையம்பரனம்பரமேனியன்கடவுள்காணுத, உருவையம் பிகைபெறப்பகுந்தளித்தவஞெனலர்புரநீற்று, பெருவையம் பெனக்கண்ணனையுடையனென்பிழைபொறுத்தழியாத, திரு வையம்புவிச்சிறப்பொடுமெளித்தவன்றிருக்களாவுடையோனே.

உடையமென்றுதம்மக்களைமனைவியையொக்கலைப்பெருவாழ்வை, அடையநல்குசீர்ச்செழும்பொருண்முதலியவனைத்தையு நினைப்பாரோ, விடையின்மேல்வருதிருக்களாநாயகன்விரைம லர்ச்செழுங்கொன்றைத், தொடையல்வேணியானடியவர்க்கன் பொடுதொண்டுசெய்மனத்தாரே. (உ௬)

மனத்தையான்றினம்வணங்குவன்மின்னெனவைகலுநிலையற்,
தனத்தைவாழ்வினைநிலையெனமதித்துழலாசையிற்றளராமே [ச்
புனத்துழாய்முகில்போற்றிடுங்கருவைவாழ்புண்ணியன்பாலற்கா
சினத்தகாலனையுதைத்தவன்பங்கயச்சேவடிவணங்கென்றே. ()

வணங்கெனத்தலையளித்தனையென்புகழ்வாழ்த்தெனநாத்தந்தாய், இணங்கெனத்திருக்கூட்டமுங்காட்டினையினிப்பெறும்பேறுண்டோ, துணங்கையிட்டுவெம்பேய்க்கணங்குதித்திடச்சுடலையாடரங்காகக், கணங்கள்போற்றநின்றாடியகுழகனேகருவையம்பெருமானே. (உஅ)

பெருமைசான்றநின்றிருவெழுத்தைந்துமேபெரும்புணையெனப்பற்றி, அருமைசான்றவிப்பவக்கடல்கடக்குமாறுசையிற்றுணிகின்றேன், இருமையின்பமுமடியவர்க்கூட்டிடுமிறைவனேயெம்மானே, தருமமூர்த்தியேயொப்பனைவனமுலைதழுவுதிண்புயத்தானே. (உகூ)

தானையெண்டிசைமுக்கணுமுச்சுடர்தழைசடைகதிர்க்கற்றை
மேனிவெங்கனலாடிடமுலகெலாம்வெந்தொழிபுறங்காடு
சேனைவெங்கொலைப்பேய்க்கணமென்னினத்திருக்களாவமர்ந்
தோனை, வானநாடரும்பூதலத்தடியரும்வணங்குவதெவ்வாறே.

வேறு.

எவ்வமுற்றதிரிமலமிற்றது
செவ்விஞானத்திருக்கண்டிறந்தது
கொவ்வைவாயுமைகொண்கன்கருவையான்
பௌவநஞ்சமுண்டான்கழல்பாடவே. (ங௧)

பாடினேன்புகழ்பங்கயச்சேவடி
சூடினேன்கருவாபுரிச்சோதியை
நாடினேனவனுனெனும்வேறறக்
கூடினேனடியார்திருக்கூட்டமே. (ஙஉ)

கூட்டமிட்டகருவிகுலைந்துடல்
சேட்டையற்றுள்ளறிவுசிதையமுன்
நாட்டமூன்றுடைநாதன்முகலிங்கன்
தாட்டுணைக்கமலந்தலைக்கொண்மினே. (ஙங)

தலைக்கொள்வெண்டலைமாலையன்றண்ணிலா
மிலைக்குந்தென்கருவாபுரிவேதியன்
புலைக்குரம்பையுடம்பிற்குடிபுகுந்
தலைக்குநெஞ்சமொழித்தெனையாள்வனே. (ரு௪)

என்னையாள்பவனென்னுள்ளிருப்பவன்
தன்னையான்றொழத்தண்ணளிதந்தவன்
பொன்னையாளும்புயன்றொழநின்றவன்
கன்னிபாகன்கருவைக்கிறைவனே. (ரு௫)

இறைவனெங்கணுமியாவையுமானவன்
பிறையணிந்தசடிலன்பெருந்தகை
கறையிலங்குமிடற்றன்கருவையான்
மறையநின்றெனையாண்டதெம்மாயமே. (ரு௬)

மாயவல்லிருணீங்கமனத்திடைத்
தூயஞானச்சுடர்விளக்கேற்றிய
நாயகன்களவீசனரைமயிர்
பாயமால்விடையான்பரமேட்டியே. (ரு௭)

பரமெனக்குனையன்றியோர்பற்றிலேன்
சரமமுற்றியபோதிற்றருவையோ
கருவைநிற்குங்களாமுதலேமறைச்
சிரமிருக்குந்திருவடிச்செல்வமே. (ரு௮)

செல்வமீயுஞ்சிறப்புமளித்துளத்
தல்லறீர்க்குமறிவையுதவிடும்
கல்விநல்குங்கதிதரும்பொற்கிரி
வல்விலான்களவீசனைவாழ்த்தலே. (ரு௯)

வாழ்வைநம்பிமதிகெட்டுக்கும்பியில்
வீழ்புன்மாந்தர்க்குறுதிவிளம்புவேன்
தாழ்சடைக்களவீசன்றனாலயம்
சூழ்தல்சூழிற்றுறக்கங்கிடைக்குமே. (௬0)

வேறு.

கிடைத்தபொருள் கரத்திருக்கக்கிடைத்திலவென் றயர்வார்போ
ல், படைத்தநினதருள்பெற்றும்பெற்றிலர்போற்பரிவுற்றேன்
முடைத்தலையிற்பலிகொள்ளுமுகலிங்காமுகிழ்த்தநிலாச்
சடைத்தலையாய்நின்மாயமியானுணருந்தரத்ததோ. (சக)

உணரார்தநின்னிலையைநீயுணர்த்தவுணர்ந்ததற்பின்
புணராததாடலையிற்புணர்ந்ததெனப்புகழோங்கத்
தணவாமலென்னையுனக்குத்தந்துருகியிரண்டற்றேன்
பணராச்சிலம்பணிந்தபழமறையெம்பெருமானே. (சஉ)

பழமையாம்வாதனையிற்படிந்தமனப்பந்தத்தின்
விழைவினுற்றலைமயங்கிவேறுவேறுருவெடுத்துச்
சுழல்குயவன்றிகிரியைப்போற்பவக்கடலிற்சுழல்வேனை
மழவிடையாய்பால்வண்ணவானவர்தங்கோமானே. (சங)

கோமானேகருவைவருகுணக்குன்றேமலரிதழித்
தேமாலைபுனைந்தசடைச்செழுஞ்சுடரேயென்றென்று
பாமாலைவாய்பாடிக்கைகொட்டிப்பதம்பெயர்த்து
நாமா லம்மின்காடொண்டராய்நமரங்காள். (சச)

தொண்டுசெய்துவழிபட்டுச்சுருதிபுகழ்களாவீசன்
புண்டரிகமலர்த்தாளைப்போற்றிமுதற்பேறுபெற்றார்
அண்டர்பிரானுன்முகத்தோனுழியானிவரென்றால்
மண்டனின்ஞாலத்தெளியமானுடரோவழுத்துவார். (சரு)

வழுத்திடுவேனுவாமலரிடுவேன்கரங்கொண்டு
தொழத்தகுவேன்முடிதாழ்த்திச்சூழ்வருவேன்றுணைத்தாளால்
அழுத்திடுவேன்மனத்துன்னையகம்புறமொன்றாயுருகிப்
பழுத்திடுவேனருள்கனியப்பால்வண்ணநம்பரனே. (சசு)

நம்பியுனதருள்வேட்டுநெடுக்கடலுட்கலங்கவிழ்ந்து
வெம்புதுயர்மனத்தார்போன்மெலிகின்றேனெடுநாளாக்
கும்பமுனிக்கருள்புரியுங்கொற்றவனேமுகலிங்கா
தும்பைமுடித்தோய்புரக்கவிரக்கமின்னந்தோன்றாதோ. (சஎ)

தோன்றியபோதுடன்றோன்றித்தோன்றுதுமறைத்தென்னை
ஆன்றசெழுஞ்செம்பிலுறைகளிம்புபோலகலாமல்
ஊன்றுமலத்துகளகற்றியுன்னருளும்பெறுவேனோ
மூன்றுலகந்தொழுதேத்துமுகலிங்காமுதற்பொருளே. (சஅ)

பொருள்வேட்டுநிலம்வேட்டும்பூவையர்தம்புணர்கலவி
மருள்வேட்டுநாடோறுமனவலிகெட்டயர்கின்றேன்
அருள்வேட்டுன்சந்நிதிப்பட்டருந்துயர்போயுய்வேனோ
தெருள்வேட்டார்க்கருள்புரியுந்திருக்களவிலுறைவோனே. ( )

உறைவாய்நன்மனத்தன்பருடனாறுமுயிராகி
நிறைவாயெவ்வுலகனைத்துநீக்கமிலாதுணர்ந்தோர்க்கு
மறைவாயுய்த்துணரார்க்குமறைபயிலுங்கருவையில்வாழ்
இறைவாநின்றிருவிளையாட்டியான்வழுத்தவடங்காதே. (ருO)

வே று.

காதற்பெருக்குமொருகோடிகோடிகவலைப்பெருக்குமிகலாய்
வாதைப்படுத்தவலைமாறுபோலமனமாலுழன்றுவிடவோ
வேதப்பெருக்குமுழவோசைவிம்முவிழவிற்பெருக்குமியல்கூர்
நாதப்பெருக்குமொழியாதுமல்குகருவேசஞானவுருவே. (ருக)

உருவாகிநிற்றியருவாகிநிற்றியுயிரோடெவர்க்குமுறவாய்
மருவாகிநிற்றிமலராகிநிற்றிமறையாகிநிற்றிமறையின்
பொருளாகிநிற்றியுனையானறிந்துபுகழ்கின்றவாறுமறியேன்
கருவாபுரிக்குளுறைதேவதேவகதியேதெனக்குமொழியே. ( )

மொழிகின்றவாறுசமயங்கடோறுமுழுதுஞ்சுழன்றுநிலையற்
றழிகின்றசிந்தையவலங்கெடுத்துன்னடிகண்டுநாடியறியும்
விழியுங்கொடுத்தமுகலிங்கநாதமிகுமன்பர்தேடுபொருளே
பொழியுங்கடைக்கணருளாலளித்திபுரையற்றமுத்திநிலையே. ()

முத்திக்கு வித்துன்னடியார்கள் சிந்தைமுளரிக்கருக்கன் மொழி
யெண், சித்திக்குமூலந்தவயோகிகட்குத்தெளிகன்னலூறமிரத
ம், பத்திக்குநித்தமருள்வீசுகொண்டல்களவீசனெங்கள்பரமன்
அத்திக்குமுன்னம்வரமேயளித்தகருவேசனம்பொனடியே. ()

அடியாரிழைத்தபிழைகோடிநெஞ்சினறியாதவாதிமுதல்வன்
கொடியார்புரத்தையழன்மூடவன்றுகுறுமூரல்கொண்டகுழகன்
நெடியோன்வழுத்துகளவீசனென்றுநினைதோறுமுள்ளநெகிழ
முடியேறுமங்கைபுளகிக்குமேனிமுகுளிக்குமென்கணிணையே.

எண்கண்ணிடத்தினகலாதசெல்வனெழிலார்களாவின்முதல்வன்
வன்கண்ணர்நெஞ்சுபுகுதாதநம்பன்மனமாசறுத்தபெருமான்
புன்கண்ணகற்றியடியாரைவீடுபுகுவித்துநின்றபுனிதன்
தன்கண்ணெனக்குமுடியாதவன்புதரவென்கொல்செய்ததவமே

தவமுந்தவத்தினுறுபேறுமானதலைவாகளாவின்முதலே
புவனங்களாவையுயிர்வர்க்கமாவைநுகர்போகமாவைபுகலும்
திவசங்களாதிவருகாலமாவைதெளிவார்தெளிந்தவமையத்
திவையன்றிநிற்பையெனினையநெஞ்சினெவரேமதிப்பருனையே.

உன்னுமமோதியுனையேவணங்கியுறுபூசைபேணுமுரவோர்
பொன்னுடளிக்கவரநல்குமாதிபுனிதாகளாவிலுறைவோய் [ன்
முன்னேயுனக்கியானடியானுமல்லேன்முழுஞானியல்லனெளியே
என்னேபிழைத்தபிழைகோடியுள்ளவெனினும்புரத்தல்கடனே.

கடவாரணத்தினுரிபோர்வைகொண்டகருவேசவாதிமுதல்வா
சடவாதனைக்குளவமேகிடந்துதடுமாறுநெஞ்சமுடையேன்
அடைவாய்வழுத்திவழிபாடுசெய்துன்னடிபேண வொன்றுமறி
யேன், மடமாலகற்றியிடுமோறளிக்கும்வரநீகொடுக்கும்வரமே.

வரையாதியற்றியிடுபாவகாரிமறமன்றிவேறுபுரியேன்
விரைமாலைசுற்றுகுழலாரிடத்துமிகவாசைவைத்துமெலிவேன்
கரையாதிருக்குமனநீகரைத்துன்னடிபாடவைத்தகதைநான்
உரையானிறைக்க*முடியாதுமுக்கணுடையாய்களாவிளொளியே

வேறு.

ஒளிமதிமுடித்தவேணியொருவனேகருவையானே
தெளிவுறுநெஞ்சந்தன்னைத்தெருட்டிநின்னிலையைக்காட்டி
அளியினுலென்னையாண்டவருட்குன்றேயுன்னையின்னும்
எளியனேன்பிறவிவேட்டோவேத்திடாதிருக்கின்றேனே. ()

இருக்கினுநிற்கும்போதுமிரவுகண்டுயிலும்போதும்
பொருக்கெனநடக்கும்போதும்பொருந்தியூண்டுய்க்கும்போதும்
முருக்கிதழ்க்கனிவாயாரைமுயங்கிநெஞ்சழியும்போதும்
திருக்களாவுடையநம்பாசிந்தையுன்பாலதாமே. (கூஉ)

சிந்தனையுனக்குத்தந்தேன்றிருவருளெனக்குத்தந்தாய்
வந்தனையுனக்குத்தந்தேன்மலரடியெனக்குத்தந்தாய்
பைந்துணருனக்குந்தந்தேன்பரகதியெனக்குத்தந்தாய்
கந்தனைப்பயந்தநாதாகருவையிலிருக்குந்தேவே. (கூங)

தேவனேநின்னையல்லாற்பிறிதொருதேவையெண்ணேன்
பாவனைநின்னினல்லாற்பிறிதொருபற்றுமில்லேன்
யாவையுங்காட்டக்கண்டேனென்னுளேநின்னைக்கண்டேன்
காவலாகருவையானேயினிமற்றோர்காட்சியுண்டோ. (கூச)

* உரையானுரைக்கவெனப்பாடமோதுவாருமுளர்.

உண்டெனமறைகளோதுமொருதனிமுதலேநாளும்
அண்டருமுனிவர்தாமுங்காண்கிலரடியேனுன்னைத்
தெண்டிரைவளாகமுற்றுந்தேடினேன்றேடித்தேடிக்
கண்டனன்களாவினீழல்கருவைமாநகரத்தானே. (௬௫)

தானெனவுருவமாகிச்சங்கற்பவிகற்பங்கொண்டு
வானகமாகிமண்ணாய்க்கடல்களாய்மலைகளாகி
ஈனமாமனப்பேய்செய்தவிந்திரசாலந்தன்னால்
நானுனையுணரமாட்டேன்களாநிழனண்ணுவானே. (௬௬)

நண்ணருந்தவங்கள்செய்துநானுடல்வருந்தமாட்டேன்
எண்ணுமைம்புலனுஞ்செற்றங்கிருவினையறுக்கமாட்டேன்
கண்ணகன்ஞாலம்போற்றக்களாநிழலமர்ந்துவாழும்
அண்ணலேயினியெவ்வாறோவடியனேனுய்யுமாறே. (௬௭)

உய்யவோருறுதிநாடாவுலகினிற்சமயமென்னும்
வெய்யவார்கலியில்வீழ்ந்துவெந்துயருழக்கின்றேற்குத்
தையலோர்பாகம்வைத்துத்தண்டமிழ்க்கருவைவாழும்
ஐயன்வந்தாண்டுகொண்டதிசயம்விளைக்குமாறே. (௬௮)

அதிசயமுளத்திற்காட்டியகம்புறந்தானாக்காட்டித்
துதிசெயக்கவினாக்காட்டித்தொடக்கறுநேயங்காட்டி
மதியினிற்களிப்புங்காட்டிவந்தெனையாண்டுகொண்டான்
கதியெனவுலகம்போற்றக்களாநிழலமர்ந்தநாதன். (௬௯)

நாதனேகவினானேவநள்ளிருட்போதிற்சென்ற
தூதனேயிமயவல்லிதுணைவனேகருவையானே
போதநேயத்தினாலுன்பொலன்கழற்றொண்டுபூண்டும்
ஏதநீயகற்றிடாமலிருப்பதுமிசையதாமோ. (௭௦)

வேறு.

இசையுஞ்செல்வமுந்திருவுமின்பமும்
அசைவிலாதபேரறிவுமுத்தியும்
விசையமுந்தருங்கருவைமேவினேன்
திசையுடுத்தவன்சீர்படிக்கவே. (எக)

படியளந்தவன்பதுமவேதியன்
அடிமுடித்தலமறியொணுதவன்
கடிகொண்மாமலர்க்களவினீழலான்
குடியிருக்கவென்னெஞ்சுகோயிலே. (எஉ)

கோயில்சூழவுங்குடங்கைகொட்டவும்
வாயிற்பாடவும்வணங்கியாடவும்
ஆயிரம்பெயர்க்கருவையாதிபன்
நேயமுற்றுவாழ்தொண்டர்நேர்வரே. (எங)

நேர்ந்தநெஞ்சமேநெடிதுவாடிநீ
சோர்ந்ததுன்பமுந்துயரும்போக்குவான்
வார்ந்தசெஞ்சடைக்கருவைவானவன்
ஆர்ந்தபேரருளருவிவாடவே. (எச)

ஆடுமட்கலத்திகிரியொத்தலைந்
தோடுநெஞ்சமுங்கவலையோர்ந்துனை
நாடுமோதமிழ்க்கருவைநம்பனே
ஏடுசேர்மலர்க்களவிலீசனே. (எரு)

ஈசனேயிடத்திமயவல்லியின்
நேசனேயியற்கருவைநித்தனே
பூசியேனுனைப்புனிதவாகமம்
வாசியேன்பிறப்பென்றுமாயுமே. (எசா)

பிறவிமாயவுமருள்பெருக்கவும்
துறவியாய்வனந்துன்னல்வேண்டுமோ
இறைவனெம்பிரான்களவிலீசனென்
றறையுமுன்னமேயனைத்துமெய்துமே. (எஎ)

எய்தியென்செயுங்கருவையெம்பிரான்
கொய்யுநாண்மலர்க்கொன்றைவேணியான்
செய்யபாதமென்சென்னிவைக்கவே
வெய்யகூற்றுவன்வீசுபாசமே. (எஅ)

பாசநீக்கிமூவகைப்பசுக்களை
மாசின்முத்தியாம்வனத்தின்மேய்த்திடும்
ஈசன்மின்னனேரிடைச்சிகாதலன்
ஆசில்பால்வணத்தண்டர்நாதனே. (எகூ)

அண்டகோளமுமகிலலோகமும்
மண்டுசெந்தழல்வடிவமானவன்
முண்டகக்கழற்கருவைமூர்த்தியைக்
கண்டகண்ணிணைகளிதுளங்குமே. (அ0)

வேறு.

துளங்குநெஞ்சமேதுயருருவகையொன்றுசொல்வேன்
வளங்கொள்செந்தமிழ்க்கருவையம்பெரும்பதிமருவி
விளங்குபானிறமேனியன்றிருவடிதொழுதால்
அளந்துகாண்பருந்துறக்கவாழ்விம்மையினளிப்பான். (அக)

இம்மையின்பமுமிறுதியின்முத்தியுமளிக்கும்
நம்மையாளுடைநாயகன்கருவைநன்னகரில்
கொம்மைவெம்முலைக்கொடியொடுமினிதுவீற்றிருக்க
விம்மிமானுடர்வெந்துயருழப்பதென்விரகே. (அஉ)

விரகினாற்சிலர்செய்திடும்வினைகளுமுண்டோ
மருவியம்பரமறைந்துநின்றாட்டுவோன்போல
உரககங்கணக்கருவையானொருவனின்றாட்டப்
பரவைசூழ்நிலமன்பதைப்பரப்பெலாநடிக்கும். (௮௩)

நடித்ததாள்களுநகைமணிமுறுவலுமுகமும்
பொடித்தவேர்வெழும்புருவமுமருள்விலோசனமும்
முடித்ததண்பிறைவேணியுமுகலிங்கன்மழுமான்
பிடித்தசெங்கையுங்காண்பவர்புவியிடைப்பிறவார். (௮௪)

பிறந்தயாக்கைகளளப்பிலபெருங்கடற்புவிக்குள்
இறந்துபோயதல்லாலவற்றெய்தியதுண்டோ
கறந்தபானிறவண்ணனைக்கருத்துறவிருத்திச்
சிறந்தயாக்கையீதிதற்குநான்செய்வதுமுளதோ. (௮௫)

உள்ளதில்லதென்றுரைத்திடும்பொருளையுய்த்துணராக்
கள்ளர்நாவினிலிருந்திடாக்களாநறுங்கனியைத்
தெள்ளுசெந்தமிழ்க்கருவையிற்சினகரம்புகுந்து
மெள்ளநான்சென்றுகாண்டலுந்தீர்ந்ததுவிடாயே. (௮௬)

விடக்கைமும்மலக்குழிசியைவிளிந்தபின்றீண்டாத்
துடக்கைநோய்க்கணந்துணங்கையிட்டாடுறுமரங்கை
நடக்குஞ்சூத்திரப்பாவையைநான்சுமந்துழலல்
கடக்கநீக்கியென்றாளுவைகருவையுத்தமனே. (௮௭)

உத்திவாளராமுடித்தபால்வண்ணனேயுனது
பத்திவேண்டுவதன்றியேநரகிடைப்படினும்
முத்திவேண்டிலேன்றுறக்கமும்வேண்டிலேன்முனிவர்
சித்திவேண்டிலேன்வேண்டிலேன்றிசாதிபர்சிறப்பே. (௮௮)

சிறக்கத்தக்கதுகருவையான்றிருவடிநேயம்
மறக்கத்தக்கதுமற்றுளசமயத்தின்மயக்கம்
துறக்கத்தக்கதிவ்வுடம்பையானென்றுறுதொடர்பு
பிறக்கத்தக்கதுசிவானந்தவாரியின்பெருக்கே. (அகூ)

பெருகுகாதல்கொண்டனுதினம்பேதைநெஞ்சடியேன்
உருகிநாடவும்வெளிப்படாவுனையுளத்துணர்ந்தேன்
இருசுடரவுங்காண்பதற்கென்றெதிர்ந்திடுவாய்
கருகுகண்டனேகருவையிற்களாநறுங்கனியே. (கூ0)

வேறு.

கனிவுறுமனங்கனியநின்பெருங்கருணைதந்தவா போற்றிநாயினேன், இனியபாடலாற்களவிலீசனென்றேத்தநாத்தருமிறைவ போற்றிவான், பனிநிலாவுடன்கங்கைதுன்றுசெம்பவளவார்சடைப்பரமபோற்றிவில், குனிவுறுமுனம்புரமெரித்திடக்குருத்தவாணகைக்குழகபோற்றியே. (கூக)

குழவிவெண்ணிலாவனையவெண்ணகைக்கொடியிடத்துவாழ்குரிசில்போற்றியென், பழையதீவினைப்பகைதொலைத்திடும்பாவநாசனேபோற்றிகாய்சினத், தழுவையின்வரித்தோலசைத்தபட்டுடைமருங்கினேய்போற்றிசெந்தமிழ்க், கழுமலப்பதிக்கவுணியன்புகழ்களவினீழலிற்கடவுள்போற்றியே. (கூஉ)

கடையுகத்தினிற்பொழில்களேழையுங்கனல்கொளுத்தியசுடலையம்பலத், தடலைபூசியென்னம்மைகாணநின்றாடுமையனேபோற்றிபோற்றிநெஞ், சிடைவிடாமலுன்சரணபங்கயத்திருக்நல்கியவிறைவபோற்றிமால், விடையின்மேவியேகருவைமாநகர்வீதிவாய்வரும்விமலபோற்றியே. (கூ௩)

விமலபோற்றிநின்பெருமைநாரணன்விரிஞ்சனாதியோரறியகிற்றிலா, அமலபோற்றிநானறியும்வண்ணமுன்னறிவுதந்தருள

றிவபோற்றிதண், கமலவாவிசூழ்கருவைமாநகர்க்களவினீழல்வாழ்காலகாலனே, இமயமால்வரைக்குமரியொப்பனைக்கினியகாதலாபோற்றியெந்தையே. (கச)

எந்தையாயினாய்குரவனாயினாயிறைவனாயினாய்போற்றியென்மனப், பந்தமாயினாய்வீடுமாயினாய்பரமுமாயினாய்போற்றிதென்புலச், சந்தமால்வரைத்தமிழ்முனிக்குமைதனைமணந்தமெய்க்கோலங்காட்டினாய், சுந்தரப்புயத்தழகுபோற்றிநற்சோதிப்பால்வணத்தாதிபோற்றியே. (கரு)

ஆதிநின்றிருத்தொண்டுகாதலித்தறிவுசென்றமட்டாகநின்புகழ், ஓதுசெய்யுளிற்குறையுரைத்ததிங்கொன்றுநின்செவிக்குற்றதில்லையோ, காதனண்புடைக்கவிஞனேவலுங்கங்குலிற்கழற்கால்சிவப்புறத், தூதுசென்றவாபோற்றிநாடொறுந்தொழுமவர்க்கருள்கருவையையனே. (கசு)

ஐயனேசரண்போற்றியென்னையாளப்பனேசரண்போற்றிபொய்யிலா, மெய்யனேசரண்போற்றிவானவர்வேந்தனேசரண்போற்றிமான்மழுக், கையனேசரண்போற்றிகாலனைக்காய்ந்தவாசரண்போற்றிதீங்றச், செய்யனேசரண்போற்றிகாமனைச்செற்றவாசரண்போற்றிதேவனே. (கஎ)

தேவனேபிறர்க்கடிமையுற்றிலேன்சிந்தைநின்வசந்தந்ததன்றியும், நாவினாற்றினம்பாவிவாழ்த்துவேனாளுமென்குறைதீர்ப்பதார்கொலோ, காவன்மூவரண்கனல்கொளுத்திடக்கருணைசெய்திடுங்கடவுள்போற்றியான், பாவகாரியேயெனினுமென்னைநீடாதுகாப்பதுன்பண்பதாகுமே. (கஅ)

பண்பயிற்றி[illegible]ண்டாடுகொன்றையம்படலைமார்பனேபோற்றியம்பிகை, [illegible]ணகளித்திடத்தில்லைமன்றினிற்கடிநடம்புரிகட

வுள்போற்றிபூம், சண்பகச்செழுங்காவின்வேரிசூழ்தண்களாவ ணத்தடிகள்போற்றிமீ, விண்பரிப்பவன்றொழுதநம்பனேவெள் ளைமேனியாய்போற்றிபோற்றியே. (கக)

வெள்ளைமேனியாய்போற்றியொப்பனைமேவுமார்பனேபோ ற்றிபோற்றிபூம், கள்ளலம்புதண்களவினீழலிற்கருணைய கடவுள்போற்றிநான், உள்ளமொன்றிநின்றடிவழுத்திட செய்தவாபோற்றியின்புறத்,தெள்ளுசெந்தமிழ்க்கருவைம செல்வபோற்றிநின்சீர்கள்போற்றியே.

திருக்கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி முற்றிற்

---

மெய்கண்டதேசிகன்றிருவடிவாழ்க.